

இன்றைய செய்தி நாளைய வரலாறு
முரசொலி
நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி
செவ்வாய்க்கிழமை 06.01.2026

# முதலமைச்சரின் பொங்கல் பரிசு!

தமிழ் நாட்டு மக்கள் அனைவர் உள்ளங்களிலும் மகிழ்ச்சி பொங்கும் வகையில் பொங்கல் பரிசு அறிவித்துள்ளார் மாண்புமிகு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள்.

**அரிசி குடும்ப அட்டைதாரர்களுக்கு ரூ.3,000 பொங்கல் பரிசுத் தொகை என்ற முதலமைச்சரின் அறிவிப்பு இந்த ஆண்டின் தொடக்கத்தையே மகிழ்ச்சிக் குரியதாக மாற்றி இருக்கிறது. தமிழர் திருநாளாம் பொங்கல் பண்டிகையை சிறப்பாகக் கொண்டாடிட இப்பரிசுத் தொகை வழங்க முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் உத்தரவிட்டு உள்ளார்கள்.**

அரிசி குடும்ப அட்டைதாரர்கள், இலங்கைத் தமிழர் மறுவாழ்வு முகாம்களில் வசிக்கும் குடும்பத்தினருக்கு பொங்கல் பரிசாக இத்தொகை கிடைக்கும்.

**தமிழ்நாட்டில் மொத்தம் 2 கோடியே 22 லட்சத்து 91 ஆயிரத்து 710 அரிசி பெறும் குடும்ப அட்டைதாரர்கள் இருக்கிறார்கள். இலங்கைத் தமிழர் மறுவாழ்வு முகாம்களில் வசிக்கும் குடும்பத்தினரும் இவர்களோடு சேர்த்து பயன் பெறுவார்கள்.**

ஏற்கனவே, பொங்கல் பரிசுத் தொகுப்பாக ஒரு கிலோ பச்சரிசி, ஒரு கிலோ சர்க்கரை, ஒரு முழு நீள கரும்பு வழங்கிட முதலமைச்சர் உத்தரவிட்டுள்ளார். பொங்கல் திருநாளை முன்னிட்டு வழங்கப்படவுள்ள வேட்டி, சேலைகள் அனைத்தும் எல்லா மாவட்டங்களுக்கும் அனுப்பி வைக்கப்பட்டுள்ளன. அத்துடன் சேர்த்து 3 ஆயிரம் ரூபாயும் தரப்பட உள்ளது. பொங்கல் பரிசுத் தொகுப்பு மற்றும் ரொக்கப் பரிசு ஆகியவை அனைத்தும் மொத்தமாக ரூ.6,937 கோடி மதிப்பீட்டில் வழங்கப்பட இருக்கிறது.

பொங்கல் பரிசுத் தொகுப்பு பெறுவதற்கான டோக்கன் வழங்கல் தொடங்கிவிட்டது. பொங்கல் திருநாளுக்கு முன்பாக ரொக்கப் பரிசு, பொங்கல் பரிசுத் தொகுப்பு, வேட்டி சேலைகளை அனைத்து நியாயவிலைக் கடைகள் வழியாக வழங்கிட ஏற்பாடு செய்யப்பட்டு உள்ளது.

திராவிட மாடல் ஆட்சி அமைந்த பிறகு ஒவ்வொரு ஆண்டும் தமிழர் திருநாளாம் பொங்கல் திருநாளின் போது, மகிழ்ச்சி பொங்கி வருகிறது. அதற்கான பரிசுகளை ஆண்டு தோறும் வழங்கி வருகிறார் முதலமைச்சர் அவர்கள்.

2021 ஆம் ஆண்டு மே மாதம் மாண்புமிகு முதலமைச்சராக மு.க.ஸ்டாலின் அவர்கள் பொறுப்பேற்றார்கள்.

2022 ஆம் ஆண்டு 2.15 கோடி குடும்ப அட்டைதாரர்களுக்கு 21 வகையான பொருட்கள் தரப்பட்டது. 1,297 கோடி ரூபாய் மதிப்பீட்டில் 2.15 கோடி மக்கள் பயன்பெற்றார்கள்.

2023 ஆம் ஆண்டு 2.15 கோடி குடும்ப அட்டைதாரர்களுக்கு ஒரு கிலோ பச்சரிசி, ஒரு கிலோ சர்க்கரை, ஒரு கரும்பு தரப்பட்டது. அத்துடன் ஆயிரம் ரூபாய் பணம் தரப்பட்டது.

2024 ஆம் ஆண்டு 2.15 கோடி குடும்ப அட்டைதாரர்களுக்கு ஒரு கிலோ பச்சரிசி, ஒரு கிலோ சர்க்கரை, ஒரு கரும்பு தரப்பட்டது. அத்துடன் ஆயிரம் ரூபாய் பணம் தரப்பட்டது.

2025 ஆம் ஆண்டு 1.94 கோடி அட்டைதாரர்களுக்கு ஒரு கிலோ பச்சரிசி, ஒரு கிலோ சர்க்கரை, ஒரு கரும்பு தரப்பட்டது. ஒவ்வொரு பொங்கல் திருநாளும் கருணைப் பொங்கலாக அமைந்தது. அதன் தொடர்ச்சியாகத் தான் இந்த ஆண்டும் 3 ஆயிரம் ரூபாய் பணத்துடன் பொருட்களும் வழங்கப்பட உள்ளன.

**பொங்கல் பரிசாக ரூ.3 ஆயிரம் தரப்போகிறார்கள் என்பதைத் தெரிந்து கொண்ட எதிர்க்கட்சித் தலைவர் பழனிசாமி, '5 ஆயிரம் கொடுங்கள்' என்று சொல்லி தனது முந்திரிக்கொட்டைத் தனத்தைக் காட்டிக் கொண்டார். தான் ஆட்சியில் இருந்த காலத்தில் ஒழுங்காக எதையும் தர வக்கற்ற பழனிசாமி, இப்போது வாய் நீளம் காட்டினார்.**

2011 ஆம் ஆண்டு அ.தி.மு.க. ஆட்சிக்கு வந்தது. அதற்கு முன் தி.மு.க. ஆட்சியில் தொடங்கப்பட்ட பொங்கல் பரிசுத் தொகுப்பை 2012 ஆம் ஆண்டு நிறுத்தி விட்டார்கள்.

2013 ஆம் ஆண்டு குடும்ப அட்டைதாரர்களுக்கு 20 ரூபாயில் ஒரு கிலோ பச்சரிசியும், 40 ரூபாயில் ஒரு கிலோ சர்க்கரையும் பொங்கல் பரிசுத் தொகுப்பாக கொடுக்கப்பட்டது. இத்துடன் ரூ.100 ரொக்கத் தொகையும் கொடுக்கப்பட்டது. இவை அனைத்தும் சேர்த்து மொத்தம் ரூ.160 மதிப்பு. 2014 ஆம் ஆண்டும் இதே தொகுப்புதான் தரப்பட்டது.

* 2015 ஆம் ஆண்டு பொங்கல் தொகுப்பு எதுவும் வழங்கப்பட வில்லை.
* 2016 ஆம் ஆண்டு பொங்கல் தொகுப்புடன் ரூபாய் 100 வழங்கப் பட்டது.
* 2017 ஆம் ஆண்டு பொங்கல் தொகுப்பு வழங்கப்பட வில்லை.
* 2018 ஆம் ஆண்டு பொங்கல் தொகுப்பு வழங்கப்பட வில்லை.
* 2019 ஆம் ஆண்டு அதுவரை 100ரூபாய் பணம் பொங்கல் பரிசாக வழங்கப்பட்டுவந்த நிலையில் வரவிருந்த நாடாளுமன்றத் தேர்தலை மனதில் வைத்து 1000 ரூபாய் கொடுக்கப்பட்டது.
* 2020 ஆம் ஆண்டும் அதே 1000ரூபாயுடன் பொங்கல் தொகுப்பு வழங்கப்பட்டது.
* 2021ம் ஆண்டு சட்டமன்றத் தேர்தலை மனதில் கொண்டு தேர்தல் தேதி அறிவிப்பதற்கு முன்பாக 2500 ரூபாய் பணத்துடன் பொங்கல் தொகுப்பு வழங்கப்பட்டது. இதுதான் பழனிசாமியின் ஆட்சி காலம் ஆகும். ஆண்டு தோறும் முறையாக பொங்கல் பரிசுகள் வழங்காதவர் பழனிசாமி. மக்கள் இதனை மறந்திருப்பார்கள் என்று நினைக்கிறார் பழனிசாமி.

**"ஒவ்வொரு இல்லத்திலும் மகிழ்ச்சி பொங்கும் தைப் பொங்கல்" என்று இதனைச் சுட்டிக்காட்டி முதலமைச்சர் அவர்கள் செய்தி வெளியிட்டு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின். "உள்ளத்தில் பொங்கும் மகிழ்ச்சி இல்லத்தில் கொண்டாட்டமாக நிறைய பொங்கல் பரிசுத் தொகை வழங்கப்பட்டு உள்ளது" என்றும் குறிப்பிட்டு உள்ளார்.**

வளர்ச்சி மிகு நாட்டை மகிழ்ச்சி மிகு நாடாக ஆக்கிவிட்டார் மாண்புமிகு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின்.

---

### பெண்ணுரிமைக்காகவும் தமிழ்நாட்டின் தன்னுரிமைக்காகவும்

# நாடாளுமன்றத்தில் முழங்கும் கர்ஜனை மொழி!

## கனிமொழி கருணாநிதி எம்.பி. பிறந்தநாளையொட்டி முதல்வர் மு.க.ஸ்டாலின் பாராட்டு!

**சென்னை, ஜன. 6 -**

**"நாடாளுமன்றத்தில் முழங்கும் கர்ஜனை மொழி கனிமொழி கருணாநிதி" எம்.பி. அவர்கள் என்று அவரது பிறந்த நாளையாட்டி, முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் சமூக வலை தளத்தில் பாராட்டி பதிவிட்டுள்ளார்.**

நாடாளுமன்றக் குழுத் தலைவர் கனிமொழி கருணாநிதி அவர்களின் பிறந்தநாளையொட்டி முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் சமூக வலைதளங்களில் வெளியிட்டுள்ள பதிவு வருமாறு:-

**பெண்ணுரிமைக்காகவும் தமிழ் நாட்டின் தன்னுரிமைக்காகவும் நாடாளுமன்றத்தில் முழங்கும் கர்ஜனை மொழி என் பாசத்திற்குரிய தங்கை, கழகத் துணைப் பொதுச்செயலாளர் நாடாளுமன்றக் குழுத் தலைவர் கனிமொழி அவர்களுக்குப் பிறந்தநாள் வாழ்த்துகள்!**

இவ்வாறு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் பதிவிட்டுள்ளார்.



முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்களை நேற்று (5.1.2026) முகாம் அலுவலகத்தில், நாடாளுமன்ற கழகக் குழுத் தலைவர் கனிமொழி கருணாநிதி அவர்கள் தனது பிறந்தநாளையொட்டி சந்தித்து வாழ்த்துப் பெற்றார்.

---

### ரூ.15.30 கோடியில் 17 முடிவுற்ற பணிகள் திறப்பு!

# இந்து சமய அறநிலையத்துறை சார்பில் ரூ.108.90 கோடி மதிப்பீட்டில் 19 புதிய திட்டப் பணிகள்!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் அடிக்கல் நாட்டினார்!

**சென்னை, ஜன. 6 -**

**முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் 3.01.2026 அன்று தலைமைச் செயலகத்தில், இந்து சமய அறநிலையத்துறை சார்பில் 108 கோடியே 90 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் 11 திருக்கோயில்களில் 18 புதிய திட்டப் பணிகள் மற்றும் ஒரு பள்ளியில் கூடுதல் வகுப்பறை கட்டடம் ஆகியவற்றிற்கு அடிக்கல் நாட்டி, 15 கோடியே 30 இலட்சம் ரூபாய் செலவில் 7 திருக்கோயில்களில் 10 முடிவுற்ற திருப்பணிகள் மற்றும் 6 சரக ஆய்வாளர் அலுவலகங்களை திறந்து வைத்து, சிற்றுந்துகளின் பயன்பாட்டினை காணொலிக் காட்சி வாயிலாக தொடங்கி வைத்தார்.**

இந்து சமய அறநிலையத்துறையானது அனைத்து சாதியினரும் அர்ச்சகராகலாம் என்ற வரலாற்று சிறப்புமிக்க திட்ட செயலாக்கம், திருக்கோயில்களுக்கு குடமுழுக்குகள், திருத்தேர்களை பழுதுபார்த்து வீதிஉலா, திருக்குளங்களை புனரமைத்தல், பக்தர்களுக்கு அடிப்படை வசதிகளை மேம்படுத்திவழங்குதல், திருக்கோயிலுக்குச் சொந்தமான நிலங்களை ஆக்கிரமிப்பிலிருந்து மீட்டெடுத் தல், அன்னதானத் திட்டம் விரிவாக்கம், மலைத் திருக்கோயில்கள் மற்றும் முக்கிய திருக்கோயில்களில் மருத்துவ மையங்கள் அமைத்தல், ஒருகால பூசைத் திட்டம் விரிவாக்கம், ஒருகால பூசைத் திட்ட திருக்கோயில்களில் பணிபுரிந்து வரும் அர்ச்சகர்களின் பிள்ளைகளுக்கு மேற்படிப்பிற்கான கல்வி உதவித்தொகை வழங்குதல் போன்ற பல்வேறு திட்டங்களை செம்மையாக செயல்படுத்தி வருகிறது.

11 திருக்கோயில்களில் 18 புதிய திட்டப் பணிகள் மற்றும் ஒரு பள்ளியின் கூடுதல் வகுப்பறை கட்டடத்திற்கு அடிக்கல் நாட்டி, கட்டுமானப் பணிகளை தொடங்கி வைத்தல்

இராமநாதபுரம் மாவட்டம், இராமேசுவரம், இராமநாதசுவாமி திருக்கோயிலில் 59.35 கோடி ரூபாய் மதிப்பீட்டில் அக்னி தீர்த்தம் படித்துறை, வாகன நிறுத்துமிடம், பிர்லா காட்டேஜ் பகுதி, திருக்கோயில் வடக்கு மற்றும் தெற்கு பகுதிகளில் அடிப்படை வசதி மேம்படுத்தும் பணி உள்ளிட்ட பணிகளை மேற்கொள்ளுதல்; 16.48 கோடி ரூபாய் மதிப்பீட்டில் தென்காசி மாவட்டம், குற்றாலம், ஸ்ரீ பராசக்தி வித்யாலயா சி.பி.எஸ்.சி. பள்ளியில் புதியதாக 54 கூடுதல் வகுப்பறைகள் கட்டுதல்; திருவாரூர், தியாகராஜசுவாமி திருக்கோயிலில் 7.50 கோடி ரூபாய் மதிப்பீட்டில் கமலாலய திருக்குளம் திருப்பணி, தேவாசிரிய மண்டபம் மற்றும் முன்மண்டபம் பழுது பார்த்து புதுப்பித்தல்;

திருப்பூர் மாவட்டம், பெருமாநல்லூர், கொண்டத்துக்காளியம்மன் திரு க்கோயிலில் 6.34 கோடி ரூபாய் மதிப்பீட்டில் திருமாளிகை பத்தி மண்டபம் கட்டுதல்; புதுக்கோட்டை மாவட்டம், குலமங்கலம், பசுபதீஸ்வரர் திருக்கோயிலில் 3.69 கோடி ரூபாய் மதிப்பீட்டில் சன்னதி மகாமண்டபம் திருமதில்சுவர் திரும்ப கட்டுதல்; சென்னை, வியாசர்பாடி, இரவீஸ்வரர் திருக்கோயிலில் 3.15 கோடி ரூபாய் மதிப்பீட்டில் அர்ச்சகர் மற்றும் பணியாளர் குடியிருப்பு கட்டுதல்;

தேனி மாவட்டம், குச்சனூர், சுயம்பு சனீஸ்வர பகவான் திருக்கோயிலில் 2.82 கோடி ரூபாய் மதிப்பீட்டில் பக்தர்கள் இளைப்பாறும் மண்டபம் கட்டுதல்; புதுக்கோட்டை மாவட்டம், வெள்ளாளவிடுதி, அகஸ்தீஸ்வரர் திருக்கோயிலில் 2.53 கோடி ரூபாய் மதிப்பீட்டில் சன்னதி மகாமண்டபம் திருமதில்சுவர் திரும்ப கட்டுதல்;

ஈரோடு மாவட்டம், பெருந்துறை, செல்லாண்டியம்மன் திருக்கோயிலில் 1.95 கோடி ரூபாய் மதிப்பீட்டில் வசந்த மண்டபம் கட்டுதல்; பெருந்துறை, வாகைத்தொழுவம்மன் திருக்கோயிலில் 1.93 கோடி ரூபாய் மதிப்பீட்டில் இராஜகோபுரம் கட்டுதல்; திண்டுக்கல் மாவட்டம், தாடிக்கொம்பு, சௌந்தரராஜப் பெருமாள் திருக்கோயிலில் 1.73 கோடி ரூபாய் மதிப்பீட்டில் வசந்த மண்டபம் கட்டுதல்; கோவை மாவட்டம், ஒத்தக்கால் மண்டபம், நவகோடி நாராயணப் பெருமாள் திருக்கோயிலில் 1.43 கோடி ரூபாய் மதிப்பீட்டில் சுற்றுச் சுவர் கட்டுதல்; என மொத்தம் 108.90 கோடி ரூபாய் மதிப்பீட்டிலான 18 புதிய திட்டப் பணிகள் மற்றும் ஒரு பள்ளியின் கூடுதல் வகுப்பறை கட்டடத்திற்கு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் அடிக்கல் நாட்டி, பணிகளை தொடங்கி வைத்தார்.

7 திருக்கோயில்களில் 10 முடிவுற்ற திருப்பணிகள், 6 சரக ஆய்வாளர் அலுவலகங்கள் திறந்து வைத்தல் மற்றும் சிற்றுந்துகளை தொடங்கி வைத்தல், கோவை மாவட்டம், தேக்கம்பட்டி, வனபத்ரகாளியம்மன் திருக்கோயிலில் 6.86 கோடி ரூபாய் செலவில் கட்டப்பட்ட நடைபாதை மண்டபம், சுற்றுச்சுவர், முடி காணிக்கை மண்டபம் மற்றும் உடைமாற்றும் அறை;

தஞ்சாவூர் மாவட்டம், திருநாகேஸ்வரம், நாகநாத சுவாமி திருக்கோயிலில் 3.10 கோடி ரூபாய் செலவில் கட்டப்பட்ட பக்தர்கள் தங்கும் விடுதி; கோவை மாவட்டம், பூண்டி, வெள்ளியங்கிரி ஆண்டவர் திருக்கோயிலில் 1.45 கோடி ரூபாய் செலவில் கட்டப்பட்ட பக்தர்கள் தங்கும் விடுதி; நாமக்கல் மாவட்டம், காளிப்பட்டி, கந்தசாமி திருக்கோயிலில் 85 இலட்சம் ரூபாய் செலவில் கட்டப்பட்ட புதிய அன்னதானக் கூடம்;

1.81 கோடி ரூபாய் செலவில் கட்டப்பட்ட காஞ்சிபுரம் மாவட்டம், ஏகாம்பரநாதர் திருக்கோயில் செயல் அலுவலர் அலுவலகம், நாகப்பட்டினம் மாவட்டம், தகட்டூர், பைரவநாத சுவாமி திருக் கோயில் செயல் அலுவலர் அலுவலகம், மயிலாடுதுறை மாவட்டம், திருஇந்தளூர், பரிமள ரங்கநாதர் திருக் கோயில் செயல் அலுவலர் அலுவலகம், கடலூர் மாவட்டம், குறிஞ்சிப்பாடி மற்றும் திட்டக்குடி, அரியலூர் மாவட்டம் கீழப்பழுவூர், இராணிப்பேட்டை மாவட்டம் நெமிலி, மயிலாடுதுறை மாவட்டம் புத்தூர் மற்றும் சீர்காழி ஆகிய இடங்களில் 6 சரக ஆய்வாளர் அலுவலகங்கள்;

ஈரோடு மாவட்டம், சென்னிமலை, சுப்பிரமணிய சுவாமி திருக்கோயிலில் 1.23 கோடி ரூபாய் செலவிலான 3 சிற்றுந்துகள்; என மொத்தம் 15.30 கோடி ரூபாய் செலவிலான 10 முடிவுற்ற பணிகள், 6 சரக ஆய்வாளர் அலுவலகங்களை திறந்து வைத்து, சிற்றுந்துகளின் பயன்பாட்டினை தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் தொடங்கி வைத்தார்.

இந்நிகழ்ச்சியில், கைத்தறி மற்றும் துணிநூல் துறை அமைச்சர் ஆர். காந்தி, இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர் பி.கே.சேகர்பாபு, தலைமைச் செயலாளர் நா.முருகானந்தம், சுற்றுலா, பண்பாடு மற்றும் அறநிலையங்கள் துறை கூடுதல் தலைமைச் செயலாளர் மருத்துவர் க.மணிவாசன், இந்து சமய அறநிலையத்துறை கூடுதல் ஆணையர் முனைவர் துரை. இரவிச்சந்திரன், தலைமைப் பொறியாளர் பொ.பெரியசாமி, கூடுதல் ஆணையர் (திருப்பணி) பொ.ஜெயராமன் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

காணொலிக் காட்சி வாயிலாக இராமேஸ்வரத்திலிருந்து நாடாளுமன்ற உறுப்பினர் கே.நவாஸ்கனி, சட்டமன்ற உறுப்பினர் காதர் பாட்சா முத்துராம லிங்கம், இராமநாதபுரம் மாவட்ட ஆட்சித் தலைவர் சிம்ரன்ஜீத் சிங் காலோன், இராமநாதசுவாமி திருக்கோயில் இணை ஆணையர் / செயல் அலுவலர் கே.செல்லதுரை, உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

---

### வெல்லும் தமிழ் பெண்கள் மகளிர் மாநாட்டில்

# கடலூர் கிழக்கு மாவட்டத்திலிருந்து பெருந்திரளாக கலந்து கொள்ள வேண்டும்!

## செயற்குழு கூட்டத்தில் தீர்மானம்! அமைச்சர் எம்.ஆர்.கே.பன்னீர்செல்வம் சிறப்புரை!


கடலூர், ஜன. 6 –

கடலூர் கிழக்கு மாவட்டக் கழக செயற்குழு கூட்டம், 04.01.2026, ஞாயிற்றுக்கிழமை, காலை 11 மணியளவில், காணொலி காட்சி மூலமாக, கழக தேர்தல் பணிக்குழு செயலாளர் இள.புகழேந்தி தலைமையில் நடைபெற்றது.

வேளாண்மை மற்றும் உழவர் நலத்துறை அமைச்சர், கடலூர் கிழக்கு மாவட்டக் கழகச் செயலாளர் எம்.ஆர்.கே.பன்னீர்செல்வம் சிறப்புரையாற்றினார்.

கோ.ஐயப்பன் எம்.எல்.ஏ., முன்னாள் எம்.எல்.ஏ., துரை.கி.சரவணன், மாவட்ட கழக பொருளாளர் எம்.ஆர்.கே.பி.கதிரவன், மேயர் சுந்தரி ராஜா ஆகியோர் முன்னிலை வகித்தனர். இக்கூட்டத்தில் கீழ்க்காணும் தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டது.

19ம் தேதி தஞ்சை மாவட்டம், செங்கைபட்டியில் நடைபெற உள்ள வெல்லும் தமிழ் பெண்கள் மகளிர் டெல்டா மாநாட்டில் கடலூர் கிழக்கு மாவட்டத்திலிருந்து பெருந்திரளாக கலந்துக் கொள்ள வேண்டும். பொங்கல் பண்டிகையை முன்னிட்டு, மாநகர,ஒன்றியம், நகரம்,பேரூர், கிளை கழகங்களில் விளையாட்டு போட்டிகள் நடத்திட வேண்டும். வாக்காளர் சேர்க்கை, திருத்தப் பணிகளை மேற்கொள்வது உள்ளிட்ட தீர்மானங்கள் நிறை வேற்றப்பட்டன.




தொகுதி பார்வையாளர்கள் அங்கயற்கண்ணி, சுவை.சுரேஷ், விஜயன் ராமகிருஷ்ணன், எம்.எம். சிவா, அ.பாரிபாலன், மாவட்ட கழக துணை செயலாளர்கள்: அ.ஞானமுத்து, ஆர்.சக்திவேல், சுதா சம்பத், ஒன்றிய கழக செயலாளர்கள்: அ.முத்துசாமி, த.ஜெயபாண்டியன், வி.சிவக்குமார், ஆர்.நாராயணசாமி, தங்க.ஆனந்தன்,கே.ஆர்.ராயர்,

கே.ஆர்.கோவிந்தராஜ், எஸ்.செந்தில்குமார், தெ.காசிராஜன், பி.சுப்பிரமணியன், கே.ஆர்.தனஞ்செயன், ஆர்.விஜயசுந்தரம், கே. மகேஷ், ஏ.எஸ்.மதியழகன், ஏ.எம். மதியழகன், மு.வெற்றிவேல், வி.ஜி.பி. சபாநாயகம், டி.திருமூர்த்தி, வி.பி. பாலு, பா.திருமாவளவன், பி.சுந்தரபாண்டியன், முத்துபெருமாள், ஆர். கலையரசன், எம்.மனோகரன், த. சங்கர், ஆர்.ராஜேந்திரன், கே.நடராஜன், ம. சோழன், வி.கோவிந்தசாமி, கடலூர் மாநகர செயலாளர்: கே.எஸ். ராஜா, கடலூர் பகுதி செயலாளர்கள்: ப.நடராஜன், பா.வெங்கடேஷ், எஸ். சலீம், மு. இளையராஜா, நகரச் செயலாளர்கள் கே.ஆர்.செந்தில்குமார், த.தமிழ்ச்செல்வன், வடலூர் நகரமன்றத் தலைவர் எஸ்.சிவக்குமார், தலைமை செயற்குழு உறுப்பினர்கள்: வ.ஞானசேகரன், வே.விக்கிரமன், பொதுக்குழு உறுப்பினர்கள்: கே.பி. ஆர்.பாலமுருகன், த.ஜேம்ஸ்.விஜயராகவன், பா.கோதண்டபாணி, மஞ்சு, மாவட்ட தொகுதி பார்வையாளர்கள் ஆசிரியர் பி.வெங்கடாஜலபதி,ஆசிரியர் சின்னமணி,தருமர் பழனிசாமி,

பேரூர்ச் செயலாளர்கள்: எஸ்.கணேசமூர்த்தி, கு.வே.ப.ஜெய்சங்கர், ப.மனோகரன், பூ.செல்வகுமார், க.பழனி, எம்.அன்வர்சதாத், தேன்மொழி சங்கர், கே.ஜெயச்சந்திரன், கே.சுரேஷ், மாவட்டக் கழக சார்பு அணிகளின் அமைப்பாளர்கள்: இளைஞரணி அமைப்பாளர் ஜி. கார்த்திகேயன், மாணவரணி அமைப்பாளர் அப்பு ஆர்.சந்தியநாராயணன், பொறியாளர் அணி அப்பு சந்திரசேகரன், தொண்டரணி ஆராமுது, விவசாய அணி பொன். பன்னீர்செல்வம், விவசாய தொழிலாளர் அணி ம.இராமசாமி, மகளிர் அணி த.அமுதராணி, மகளிர் தொண்டரணி, ப.மனோரஞ்சிதம், வழக்கறிஞர் அணி பி.அருள்ஜோதி, ஆதிதிராவிடர் நல்லக்குழு ஆர்.பரந்தாமன், சிறுபான்மையினர் நல உரிமை பிரிவு எம்.எஸ்.முகமது யூனூஸ், வர்த்தகர் அணி ஆர்.ரெங்கநாதன், தகவல் தொழில்நுட்ப அணி ஏ.ஜாபர் அலி, விளையாட்டு மேம்பாட்டு அணி பூ.சதீஷ்குமார், அயலக அணி வாசு, தொழிலாளர் அணி கி.தண்டபாணி, அமைப்புசாரா ஓட்டுநர் அணி தாணூர் சிவக்கொழுந்து, நெசவாளர் அணி நல்லதம்பி, இலக்கிய அணி பழனிசாமி, டி.வெங்கடாஜலபதி, கலை இலக்கிய பிரிவு, ஜி. சின்னமணி, தகவல் தொழில்நுட்ப அணி அ.முத்த மிழ்செல்வன், வி. எம்.வெற்றிசெல்வன், கோ.பா.கௌதமன், ப.பிரவின் குமார் உள்ளிட்ட மாவட்ட, மாநகர, ஒன்றிய, பேரூர் நிர்வாகிகள், சார்பு அணி நிர்வாகிகள் கலந்துகொண்டனர்.